**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 04/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | ரகு | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.08.2025.

**3வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் தாவா சொத்து மனையை விற்ககூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் கஜேந்திரனிடம் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை மனைப்பிரிவு என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 19.04.2014 முதல் 18.07.2014 வரை என கால அவகாசம் போட்டுள்ளது என்றால் சரிதான். 18.07.2014-க்கு பிறகு அவர்கள் மீது நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் வியாபாரம் செய்து வந்ததால் எடுக்கவில்லை. வியாபாரம் செய்தது யார் யார் என்றால் நான், மலர் மற்றும் கஜேந்திரன். தாவாவில் நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து எந்தெந்த தேதியில் எவ்வளவு மனை விற்றோம் என சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படுவது தாவா சொத்திற்கான 01.01.1975 முதல் 03.08.2025 வரையான வில்லங்க சான்று என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்று பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றை பார்த்து எத்தனை மனை விற்பனை செய்தோம் என சொல்லமுடியுமா என்றால் எனக்கு கண் பார்வை கம்மி, சிறு எழுத்து தெரியவில்லை அதனால் படித்து சொல்ல முடியாது.

4. சின்னதம்பியின் முகவராக கஜேந்திரன் என்பவர் சிற்றம்பலம் என்பவருக்கு 31.10.2020 அன்று ஆவண எண்.3875/2020 முன்னிலைக்கு பல மனைகளை விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதே தேதியில் சின்னதம்பியின் முகவராக கஜேந்திரன் என்பவர் ஸ்டீபன்

என்பவருக்கு ஆவண எண்.3877/2020 படி பல மனைகளை விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. நான் இந்த தாவாவை 23.11.2020 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புஎத்தனை மனைகள் விற்பனை செய்யப்பட்டது என்றும் எத்தனை மனைகள் விற்பனை செய்யப்படாமல் உள்ளது என்றும் விவரம் தெரிந்துகொண்டு தாவாவை தாக்கல் செய்தேனா என்றால் விவரம் தெரிந்துகொண்டு தான் தாக்கல் செய்தேன். மேற்படி இரண்டு ஆவணங்களை பற்றி தெரிந்துகொண்டு தான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல, அதுபற்றி தெரியவில்லை.

6. தாவாவில் 50 மனைகள் என சொல்லியுள்ள நிலையில் என்னென்ன மனைகள் என எண்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றாலும் அதை சொன்னால் எனக்கும், 1 மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள உறவு தெரிந்துவிடும் என்றாலும் ஏற்கனவே விற்பனை செய்த மனைகளை வாங்கியவர்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. யார் யார் மனையை விற்பனை பெற்றார்களோ அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த பிரதிவாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் பேரில் எந்த நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்காததால் அது செல்லாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு அனுமதி இல்லை என்றாலும் விளம்புகை பரிகாரம் கேட்டு தான் தாவா தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் தவறான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.